இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 257 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 15 – செவ்வாய்க்கிழமை 28 ஏப்ரல் 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 257 : Thiruvalluvar Year - 2057 - Chithirai 15 - Tuesday 28 April 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கொடைக்கானலில் நேற்று முன்தினம் நடைபயிற்சி மேற்கொண்டபோது பொதுமக்கள் சந்தித்து மகிழ்ச்சியுடன் கை குலுக்கி வாழ்த்துத் தெரிவித்தனர்!

## கொடைக்கானலில் நடைபயிற்சி மேற்கொண்ட

# முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் பொதுமக்கள் சந்திப்பு!

## செல்ஃபி எடுத்து கை குலுக்கி வாழ்த்துத் தெரிவித்தனர்!

**கொடைக்கானல், ஏப். 28 - கொடைக்கானலில் நடைபயிற்சி மேற்கொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுடன், ஏராளமான பொது மக்களும் சுற்றுலாப் பயணிகளும் செல்ஃபி எடுத்துக்கொண்டும், கை குலுக்கியும் வாழ்த்து தெரிவித்தனர்.**

சட்டப்பேரவைத் தேர்தல் கடந்த 23ம் தேதி முடிவடைந்தது. வாக்கு எண்ணிக்கை மே 4ம் தேதி நடைபெற உள்ளது.

தேர்தலையொட்டி, முதலமைச்சரும் - தி.மு.க. தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக பல்வேறு மாவட்டங்களுக்கும் தொடர்ச்சியாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களுக்கு தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கொடைக்கானலில் நேற்று முன்தினம் (26.04.2026) நடைபயிற்சி மேற்கொண்டபோது, பொதுமக்கள் செல்ஃபி எடுத்து மகிழ்ந்தனர்!

தற்போது வாக்குப்பதிவு முடிவடைந்த நிலையில், குடும்பத்தினருடன் கொடைக்கானலில் ஓய்வெடுக்க சென்றுள்ளார்.

### பொதுமக்கள் உற்சாக வரவேற்பு!

சென்னையில் இருந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனது குடும்பத்தினருடன் தனி விமானத்தில் மதுரைக்கு வந்தார். பின்னர் அங்கிருந்து கார் மூலம் கொடைக்கானல் வருகை தந்தார்.

வழிநெடுகிலும் சாலையோரம் திரண்ட தி.மு.க.வினர் மற்றும் பொதுமக்கள் முதலமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். பொதுமக்களுக்கு கையசைத்தபடி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்றார். வத்தலக் குண்டு, காட்ரோடு, பெருமாள் மலை, மூஞ்சிக்கல் ஆகிய இடங்களிலும் ஏராளமானோர் திரண்டு முதலமைச்சருக்கு கையசைத்தபடி வாழ்த்துத் தெரிவித்தனர்.

முன்னதாக தேவதானப்பட்டி அருகே கெங்குவார் பட்டியில் உள்ள கவிப்பேரரசு வைரமுத்துவின் தோட்டத்துக்கு சென்று சிறிது நேரம் ஓய்வு எடுத்தார்.

பின்னர் கொடைக்கானல் வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாம்பார்புரம் பகுதியில் உள்ள தனியார் விடுதியில் குடும்பத்துடன் தங்கியுள்ளார். முதல்வர் வருகையை முன்னிட்டு கொடைக்கானலில் ஏராளமான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

### நடைபயிற்சி மேற்கொண்டார்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தினமும் காலையில் விடுதி வளாகம் அல்லது நட்சத்திர ஏரியில் நடைபயிற்சி மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டு இருந்தது.

அதன்படி நேற்று முன்தினம் காலையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நட்சத்திர ஏரியில் நடைபயிற்சி மேற்கொண்டார்.

அப்போது அதே பகுதியில் நடைபயிற்சி மேற்கொண்ட பொதுமக்கள் அவருடன் உற்சாகமாக 'செல்பி' எடுத்துக் கொண்டனர்.

### தூய்மைப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார்!

மேலும், ஏரியில் தூய்மைப் பணி மேற்கொண்ட தொழிலாளர்களையும் வரவழைத்து அவர்களிடம் பணி செய்யும் விபரம், நேரம், சம்பளம் உள்ளிட்ட விபரங்களை கேட்டறிந்தார். தூய்மைப் பணியாளர்களுடனும் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

முதலமைச்சர் நடை பயிற்சி மேற்கொண்டதை அறிந்து பொது மக்கள் மற்றும் குழந்தைகள் ஆர்வமுடன் வந்து அவருடன் செல்பி எடுத்துக் கொண்டனர்.

முதலமைச்சர் வருகையை முன்னிட்டு வருகிற 30ந் தேதி வரை கொடைக்கானலில் டிரோன்கள், ஆள் இல்லா விமானங்கள் பறக்க தடை விதித்து மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டு உள்ளார்.

அதே நேரம் சுற்றுலா பயணிகளுக்கு எந்தவித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

## ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில் மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டம் சீர்குலைப்பு!

# 'விபிஜி ராம் ஜி' திட்டமும் செயல்படவில்லை!

புதுடெல்லி, ஏப்.28-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்டத்தை (எம்என்ஆர்இஜிஏ) சீர்குலைத்த பிறகு ஒன்றிய அரசால் கொண்டுவரப்பட்ட விபி ஜி ராம் ஜி (விக்சித் பாரத்உத்தரவாதம் மற்றும் ஆஜீவிகா இயக்கம் (கிராமின்)) திட்டம் இன்னும் செயல்படுத்தப்படாததால், வேலைவாய்ப்பு உறுதித்திட்ட தொழிலாளர்கள் ஒரு மாதமாக வேலை இழந்துள்ளனர்.

இத்திட்டம் குறித்து மாநில அரசுக்கோ அல்லது உள்ளாட்சி அமைப்புகளுக்கோ எந்த அதிகாரப்பூர்வ தகவலும் கிடைக்கவில்லை. அதற்கான நடைமுறைகள் குறித்தும் தெளிவு இல்லை. ஒன்றிய அரசின் உத்தரவு கிடைத்தாலும், அதை நடைமுறைப்படுத்த குறைந்தபட்சம் 6 மாதங்களாவது ஆகும். புதிய திட்டம் அமலுக்கு வரும் வரை, வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல ஒன்றிய அரசு முயற்சிக்கவில்லை. 2026-27 நிதியாண்டிற்கான வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் செயல் திட்டம் மற்றும் தொழிலாளர் பட்ஜெட்டிற்கு ஒன்றிய அரசு இன்னும் ஒப்புதல் அளிக்கவில்லை.

2024 ஏப்ரலில் 2,81,614 வேலை நாட்களையும், 2025 ஏப்ரலில் 5,78,705 வேலை நாட்களையும் வழங்குமாறு கேரள அரசு சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளால் இதைச் செய்ய முடிந்துள்ளது. இருப்பினும், இந்த ஆண்டு ஏப்ரல் 23 வரை 83,916 வேலை நாட்கள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டு அனுமதிக்கப்பட்ட வேலையின் தொடர்ச்சியாகும்.

விபிஜி ராம் ஜி திட்டம், வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டத்தின் உண்மையான உள்ளடக்கத்தைச் சிதைப்பதாக ஏற்கனவே குற்றம் சாட்டப்பட்டது. இத்திட்டத்தின் செலவில் 60 சதவிகிதத்தை ஒன்றிய அரசும், 40 சதவிகிதத்தை மாநில அரசும் ஏற்கும். இதனால், மாநில அரசுக்கு ஆண்டுக்கு ரூ.1,600 கோடி இழப்பு ஏற்படும். முன்பு, இந்த விகிதம் 90:10 ஆக இருந்த மகாத்மா காந்தி வேலை உறுதி திட்டம் சீர்குலைப்பு விபிஜி ராம் ஜி திட்டமும் சீர்குலைக்கப்பட்டுள்ளது.

### கவுண்ட் டவுன்

